2. சிறப்புக் குறிப்பு.

தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கிராமநலப் பணியாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு முழுவதும் வருவாய்த் துறை மற்றும் கிராம நல ஊழியர்கள் போராடுவது குறித்த ஒரு பிரச்சினை குறித்து..

3. ஒழுங்குப் பிரச்சினை.

16—3—1993 அன்று அவையில் எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நாம் எல்லாம் அரசியல் நெறிமுறைகளைக் கடைபிடிப்போம் என்று உறுதிமொழி எடுத்து இருக்கிறோம். இந்த அரசியல் சட்டத்தில் அதிகார வரம்புகள் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அதன் படி சென்ட்ரல் லிஸ்ட்— மத்திய அதிகாரப் பட்டியல், ஸ்டேட் லிஸ்ட்— மாநிலங்கள் அதிகாரப் பட்டியல், கன்கரன்ட் லிஸ்ட்— பொதுப் பட்டியல் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வரம்பை மீறி யார் செயல்பட்டாலும் அது அரசியல் சட்டத்தை மீறியது ஆகும். மாநில சட்டமன்றத்திற்கு எந்த விதத்திலும் சம்பந்தமில்லாத, தொடர்பு இல்லாத பிரச்சினை இங்கு எழுப்பப் பட்டது. மத்திய அரசின் மீது குற்றம் சுமத்துவதற்கு சட்ட மன்றம் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நேற்றைய தினம் இதைப்பற்றி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்றதால் (குறுக்கீடுகள்) அதுவரை நான் உங்களை அனுமதித்தேன் (குறுக்கீடுகள்) நேற்றைய தினம் எழுப்பப்பட்ட ஒரு பிரச்சினை இன்றைக்கு பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. (குறுக்கீடுகள்) இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. அவையில் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கிற நேரத்தில், இது விதிகளுக்குப் புறம்பாக நடைபெறுகிறது என்று எழுப்புவதுதான் பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடுகள்). நேற்றைய சம்பவத்தைத் திரும்ப அவையிலே எழுப்புவதற்கு வேறு வேறு வழி முறைகள்தான் இருக்கின்றனவே தவிர இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. (குறுக்கீடுகள்). நேற்றைய தினம் நடந்த பிரச்சினை என்று ஆரம்பிக்கிற காரணத்தாலே தான் நேற்றைய தினம் நடந்த சம்பவத்தை எந்த வகையிலேயும் இன்றைக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்ப முடியாது என்று சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : எப்படி என்று சொல்லுங்கள்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வப்போது எழுப்புவதுதான் பாயின்ட் ஆஃப் ஆர்டர். (குறுக்கீடு) என்னுடைய முடிவை நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் எழுப்பியதற்கு நான் என்னுடைய முடிவைச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அவை நடந்து கொண்டிருக்கிற நேரத்தில் எழுப்பப்படுவதுதான் அவை நடவடிக்கை பற்றிய பாயின்ட் ஆஃப் ஆர்டராக வரும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : அது அவைக் குறிப்பில் ஏறியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை எழுப்புவதற்கு வேறு சில விதிகள் இருக்கின்றன. இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. அதைத்தான் சொன்னேன். (குறுக்கீடு) பாயின்ட் ஆஃப் ஆர்டரில் அது வராது. அதனால்தான் தாங்கள் எழுப்புவது பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது என்று சொன்னேன். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, உட்கார வேண்டும். மற்ற உறுப்பினர்கள் தாமரைக்கனியைப் பார்த்துப்பேசக் கூடாது. திரு. ஞானசேகரன், தாமரைக் கனியைப் பார்த்து நீங்கள் பேசக் கூடாது. (குறுக்கீடு) அது பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிளப்பினீர்கள். நான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்று சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) நேற்றையதினம் நடந்த சம்பவத்திற்கு இன்றைக்கு பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவதற்கு விதிகளில் இடமில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : விதிகளிலே இடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதி, சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : I will come to that பேரவை விதி 90ன் கீழ், சபைக்கு சம்பந்தமில்லாத விஷயத்தைப் பேரவையில் விவாதிக்கக் கூடாது என்று இருக்கிறது.

1993 மார்ச் 17]

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு விதி இருக்குமானால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை நேற்றே சுட்டிக் காட்டி இருக்க வேண்டும். நேற்றே இதைப் பற்றிப் பேசியிருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று நடைபெற்ற ஒரு சம்பவத்திற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கண்டனத்தைத் தெரிவித்து, வெளி நடப்புச் செய்தார்கள். நேற்று நடைபெற்ற விவாதத்திற்கு அவர்களால் பதில் கூற முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). அவர்கள் வெளி நடப்புச் செய்துவிட்டு, நேரம் எடுத்துக்கொண்டு யோசித்து வந்து, அதைப்பற்றி இன்று விவாதிக்க வேண்டுமென்று சொன்னால், அவையின் நேரத்தை இப்படி வீண் அடிப்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 90 என்று சொன்னீர்கள். விதி 90-ல், "Every speech must be strictly relevant to the matter before the Assembly" என்றுதான் இருக்கிறது. நேற்றையதினம் நடந்ததற்கு இப்போது கிளப்புகிறீர்கள். இன்றைக்கு எழுப்புகிற பாயின்ட் ஆப் ஆர்டர், should be relevant to the matter before the House.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : Rule 90, 92 and 93 should be read together. You cannot take rule 90 alone.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. தயவுசெய்து உட்கார வேண்டும். (குறுக்கீடு) இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. இதை அனுமதிக்க முடியாது. பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்டீர்கள். என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று உங்களைச் சொல்லச் சொன்னேன். நீங்கள் நேற்றையதினம் நடந்த சம்பவத்திற்கு பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றீர்கள். (குறுக்கீடு) நேற்றைய தினம் முழு உரிமையும் நீங்கள் எடுத்துக் கொண்டு பேசினீர்கள். இங்கே எழுப்பப்பட்ட விவாதத்தைப் பேசக் கூடாது என்று நீங்கள் சொல்லவில்லை. எழுப்பப்பட்ட விவாதத்திற்கு நீங்கள் பதில் சொன்னீர்கள். திரு. குமரி அனந்தன் அவர்கள் முழு அளவில் நேரம் எடுத்துக் கொண்டு பதில் சொன்னார்கள். நீங்கள் அப்போதே இதைப் பற்றிப் பேசக் கூடாது என்று இங்கே சொல்லவில்லை (குறுக்கீடு). அதோடு, 116 விதி (4) 'A Point of Order may be raised in relation to the business before the House at the moment' என்று குறிப்பிடுகிறது.

[பேரவைத் தலைவர்] [1993 மார்ச் 17

அதைத்தான் முதலிலே சொன்னேன். (குறுக்கீடு). இப்போது எடுத்துக் கொண்டிருப்பது தமிழ்நாடு முழுவதும் வருவாய்த்துறை கிராம நல ஊழியர்கள் போராடுவது பற்றி திரு. ஜி. பழனிசாமி அவர்களும், மற்றும் பல உறுப்பினர்களும் கொடுத்திருக்கிற பிரச்சினை பற்றியது. அதிலே நீங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம். அதுதான் நமக்கு இருக்கிற விதி. (குறுக்கீடு) நீங்கள் எழுப்பியது விதி 90-ன் கீழும் வராது, பாயின்ட் ஆஃப் ஆர்டரை விளக்குகிற 116(4) விதியின் கீழும் வராது. இப்போது அதை எழுப்புவதற்கு எந்த வகையிலும் விதி முறைகளில் இடமில்லை. (குறுக்கீடு) உங்களை நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு). மாண்புமிகு சட்ட அமைச்சர்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கட்சியின் சார்பாக பேசிக் கொண்டிருக்கும்போது இடையில் பேசுவது எப்படி ஏற்புடையதாக இருக்கும்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு பிரச்சினையைக் கிளப்புகிறார்கள். அங்கேயிருந்து அவர்கள் எல்லாம் பேசிக் கொண்டிருந்தால் இந்தப் பக்கமும் நான்கு பேர் பேசினால் சபை எப்படி நடக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நாள்தோறும் உறுப்பினர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். இரண்டு நாட்களாக குறிப்பாக நான் நினைவுபடுத்துகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பவேண்டுமென்று அனுமதி கேட்டார். அவருக்கு அனுமதி அளித்தேன். அவர் என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதைப் பற்றிச் சொல்ல வந்தார். அவர் சொல்ல வந்த விஷயமே, 'நேற்றையதினம் அவையினுடைய நடவடிக்கையில்' என்று வந்தவுடன்தான் விதி 90 மற்றும் 116 (4)-ன்படி இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று சொன்னேன். பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று நான் சொல்லியிருக்கிறபோது அதைப் பற்றி மேற்கொண்டு பேசுவது நல்லதல்ல. (குறுக்கீடு) நீங்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. உட்காருங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 116(3) விதியில், "A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as to regulate the business of the House and shall raise a question which is with in the cognizance of the Speaker."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. "...as to regulate the business of the House." என்றும் இருக்கிறது. நீங்கள் நேற்றையதினம் நடந்ததாகச் சொல்கிறீர்கள். You referred to the business of yesterday.

நான் அதைத்தான் சொல்ல வருகிறேன். நீங்கள் அதையும் படியுங்கள். நான்காவது உள் விதியையும் படியுங்கள். ஆகவே தான் நான் சொன்னேன். (குறுக்கீடு) என்னுடைய ரூலிங்கைச் சொல்லியிருக்கிறேன். என்னுடைய ரூலிங்கை நான் சொல்கிற போது, நீங்கள் எனக்கு ரூலிங் சொல்லிக்கொண்டு இருக்கக் கூடாது. நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினீர்கள். நீங்கள் எழுப்பிய பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது இப்போது அவையின் முன்னர் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய பிரச்சினை தொடர்புடைய தாக இல்லாத காரணத்தால் அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று நான் சொல்கிறேன். நான் சொல்வதைத்தான் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. தயவுசெய்து உட்காருங்கள்.

2. சிறப்புக் குறிப்பு—தொடர்ச்சி.

கிராம நலப் பணியாளர்கள் தங்களை அரசுப் பணியாளர்களாக்க வேண்டுமென்று வேலை நிறுத்தம் செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கிராம நல ஊழியர்கள் பற்றிய பிரச்சினையை எடுத்திருக்கிறேன். திரு. பழனிசாமி (குறுக்கீடு) நீங்கள் சொல்வதை வேறு வகையில் கொண்டு வாருங்கள். அதை வேறு வகையில் கொண்டு வர வேண்டுமே தவிர பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கொண்டு வர முடியாது. நீங்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. தயவுசெய்து உட்காருங்கள். திரு. பழனிசாமியைப் பேச அனுமதி யுங்கள். (குறுக்கீடு) உங்களை நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. நான் திரு பழனிசாமியை அனுமதித்திருக்கிறேன். நீங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடு) நான் திரு. பழனிசாமியை அழைத் திருக்கிறேன். (குறுக்கீடு) கிராமநல ஊழியர்கள் பற்றிய பிரச்சினை குறித்து திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞான சேகரன், திரு. வி. தம்புசாமி, திரு. கே. செல்வராஜ், திரு. சோ. ராசாராமன், திரு. எம். பன்னீர்செல்வம் ஆகியோரும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதுபற்றி எழுப்ப அனுமதிக்கிறேன். திரு. பழனிசாமி. (குறுக் கீடு) எல்லா நேரத்திலும் எல்லாவற்றையும் பேசிக்கொண்டு இருக்கவே முடியாது. சில விதிமுறைகள் இருக்கின்றன. (குறுக் கீடு) இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு) என் னுடைய ரூலிங்கைச் சொல்லிவிட்டேன். நீங்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. (குறுக்கீடு) திரு. பழனிசாமி பேசுங்கள்.

விதி 116(2)-ல் பேரவைத் தலைவருடைய decision தான் final. என்று இருக்கிறது. நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். எல்லா விதியையும் நீங்கள் மீறுகிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி ஒரு பிரச்சினையை எழுப்புவதற்கு நீங்கள் இடையூறு செய்கிறீர்கள்.

முற்பகல் 11-15

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தலைவர் அவர்களே, எங்களைப் பேசவிடாமல் செய்ததற்காக, அதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கிராம நலப் பணியாளர்கள் 33 ஆயிரம் பேர் கடந்த ஒரு மாத காலமாக, தங்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்பதற்காக வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டுள்ளனர். தங்களை அரசு ஊழியர்களாக ஆக்கி கடைநிலை ஊழியர்களின் சலுகைகள் தங்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று கோரி அரசாங்கத்தில் பேச்சுவார்த்தை மூலமாக கோரி வருகிறார்கள் ; அரசாங்கத்திற்கு விண்ணப்பமும் சமர்ப்பித்து இருக்கிறார்கள்.

கிராம நலப் பணியாளர்கள் பொதுவாக தமிழ்நாட்டில் அரசாங்கம் செயல்படுத்தும் திட்டங்களையும், அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாநில உயர் அதிகாரிகள் தமிழ்நாடு முழுவதும் செல்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்காக தங்களுடைய பணியை இரவு பகலாக 24 மணி நேரமும் பணியாற்றிக்கொண்டு இருக்கக்கூடியவர்கள். மேலும் அவர்கள், வெள்ள விபத்துக்கள் தீ விபத்துக்கள், மழைக் காலங்களிலே இரயில் போக்குவரத்துக்களிலே கூட ஏதாவது விபத்து ஏற்பட்டு இருக்கிறதா என்று இரவு பகலாக சுற்றிப் பார்த்து, தங்களுடைய உயிரைப்பணயம் வைத்து பணியாற்றிக் கொண்டு இருக்கக் கூடியவர்கள். எனவே அவர்களுடைய கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அவர்கள் கடந்த 16 ஆம் தேதி முதல் தொடர் உண்ணாவிரதம் நடத்தி அரசாங்கத்தின் கவனத்திற்கு அவர்களுடைய கோரிக்கைகளைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். இன்றைக்கு சாத்வீகமான முறையிலே உண்ணாவிரதம் இருக்கக்கூடிய அவர்களை காவல் துறை கைது செய்து, 64 பேர்களுக்கு மேற்பட்டவர்களை இன்றையதினம் உள்ளே வைத்து இருக்கிறது. அதனால் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை இன்றையதினம் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கும்போது, தமிழ்நாட்டிலே 4 கிராம நலப் பணியாளர்கள் அநேகமாக உயிர் இழந்துகூட இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு துயரமான நிகழ்ச்சி நடைபெற்று, 33 ஆயிரம் பேர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கக் கூடிய நேரத்தில், அவர்கள் வைத்து இருக்கிற கோரிக்கைகளை அரசாங்கம் மறுபரிசீலனை செய்து, பேச்சு வார்த்தை மூலமாக அவர்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

1993 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.எஸ்.டி. சோம சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட கிராம உதவியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பார்த்து தங்களுடைய கோரிக்கைகளைக் கொடுத்து இருக்கிறார்கள். இவர்களை அழைத்துப் பேசவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்வது சரியல்ல என்பதையும் முதலிலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று இவ்வளவு வேலைகளுக்கு இடையிலேயும் அவர்களுடைய சங்கப் பிரதிநிதிகளை அழைத்து அவர்கள் கொடுத்த கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்று இருக்கிறார்கள். அதோடுமட்டுமல்லாமல் 11-3-1993-ல் வருவாய்த்துறை அமைச்சர் பேசியிருக்கிறார். முதண்மைவருவாய் ஆணையர் 12—3—1993-ல் பேசி இருக்கிறார். வருவாய்த்துறை செயலாளரும் 12—3—1993-ல் பேசி இருக்கிறார். நாங்கள் எல்லாம் பேசியது போதாது என்று எண்ணித்தான், மாண்புமிகு முதலமைச்சரையும் அவர்கள் பார்க்க விரும்பிய போது அவாகள் விரும்பியதை நான் மாண்புமிகு முதலமைச்சரிடம் தெரிவித்தபோது, நேற்று முதலமைச்சர் அவர்கள், அவர்களைப் பார்த்து அவர்களுடைய கோரிக்கைகளைப் பெற்று இருக்கிறார்கள்; அதுமட்டுமல்ல, முதல்வர் அவர்கள், அவர்களுடைய கோரிக்கைகளைக் கவனிக்காமல் இல்லை.

இந்த ஏடு கிராம உதவியாளர்களால் நடத்தப்படுகிற ஏடு. அந்த ஏட்டில் ஒன்று சொல்லியிருக்கிறார்கள். 'நாம் 15 கோரிக்கைகள் வைத்தோம். இந்த அரசு, இப்போது இருக்கிற புரட்சித் தலைவி அரசு அதிலே 8 கோரிக்கைகளை நிறைவேற்றி இருக்கிறது, என்று அவர்கள் மனமுவந்து தெரிவித்து இருக்கிறார்கள். மேலும், இதை எழுதுகிறபோதும், கிராம உதவியாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற சலுகைகள் அனைத்தும் 1967-க்குப் பின்தான் அதுவும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேதான் பெற்று இருக்கிறோம் என்று அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

முற்பகல் 11-20

அதுமட்டுமல்லாமல் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இப்போது 1—1—1992-ல் அவர்களுக்கு 502 ரூபாய் என்று இருந்ததை 612 ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் மற்ற அரசு அலுவலர்கள், அதிகாரிகள் வேலையில் இருக்கும்போது இறந்தால் எவ்வளவு கொடுக்கிறார்களோ அதையும் கொடுக்க வேண்டுமென்று இன்றைக்கு இருக்கிற அரசு, புரட்சித் தலைவி அரசு அவர்களுக்கு 60,000 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று அறிவித்து இருக்கிறது.

[திரு.எஸ்.டி. சோமசுந்தரம்] [1993 மார்ச் 17

இது இன்றல்ல, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலிருந்து அவர்கள் பகுதி நேர ஊழியர்களாக இருந்து வருகிறார்கள். அதே கிராமத்தில் நியமிக்கப்படுவதால், அரசு வேலையையும் பார்த்துக் கொண்டு, சொந்த வேலையையும் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலை இந்த நாடு விடுதலை அடைவதற்கு முன்னாலிருந்து தொடர்ந்து அப்படியே வந்து கொண்டிருக்கிறது. விடுதலை அடைந்த பிறகு பல்வேறு அரசுகள் ஆட்சிக்கு வந்து, அப்போதும் பகுதி நேர வேலையாக இருந்து, பகுதி நேர ஊதியத்தைப் பெற்று வந்தார்கள். முதன் முதலாக 1984-ல் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் ஒரே நாளில் 140 ரூபாய் சம்பளம் என்று இருந்ததை 240 ரூபாயாக ஆக்கினார். அது மட்டுமல்ல. அன்றைக்கு பல ஆண்டுக் காலம் சேர்த்து 5,000 6,000 ரூபாய் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு தெரியும். இப்படி அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் இந்த அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. அதை செய்யும். மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் இதை மிக கவனத்தோடு கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்களிடம் பேசினோம். பேசாமல் இல்லை. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் நான் பேசவில்லை என்று சொல்கிறீர்கள். புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு இட்ட ஆணையே யார் எதைக் கேட்டாலும் உடனே தாமதம் இல்லாமல் செய்ய வேண்டும். அப்படி உடனே தாமதம் இல்லாமல் செய்கிறபோது கோரிக்கை நிறைவேற்றப்படுகிறது. சமுதாயத்திற்கு இடையூறு இல்லாத காரியத்தை யார் கேட்டாலும் செய்ய வேண்டுமென்று அவர்கள் எங்களுக்கு கட்டளை இட்டிருக்கிறார்கள். யார் வேண்டினாலும் கூப்பிட்டுப் பேச வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் கூப்பிட்டுப் பேசுவதில், அவர்களுடைய கோரிக்கைகளை அனுதாபத்துடன் கவனப்பதில் இந்த அரசு எப்போதும் பின் வாங்காது, மகிழ்ச்சியுடன் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. வே. தம்புசாமி.

<u>திரு. வே. தம்புசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை கடை நிலை ஊழியர்களுடைய போராட்டம் குறித்து நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் வருவாய்த் துறை ஆணையர் அவர்கள் அழைத்துப் பேசுகிறபோது கோரிக்கைகள் சம்பந்தமாக பரிசீலிக்கவில்லை. இந்தப் போராட்டத்தை நீங்கள் வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு பரிசீலிக்கலாம் என்று அவர்கள் கூறுகிற

போது அவர்கள் ஏற்றுக் கொள்ளாத சூழ்நிலை இருந்தது. அதனுடைய விளைவாகத்தான் இன்றைய தினம் உண்ணா விரதம் இருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருக்கக்கூடியவர்களை கடந்த இரண்டு நாட்களாக அரசு கைது செய்து அவர்களை சிறையில் அடைத்து இருப்பது எந்தவிதத்திலும் நியாயமானதல்ல. அவர்கள் கடைநிலை ஊழியர்களாக இருந்தாலும் அடிப்படை ஊழியர்கள். அரசினுடைய வருமானத்தை அன்றாடம் இரவும் பகலும் சிரமப்பட்டு, சங்கடப்பட்டு வசூலித்து அரசுக்கு வருவாயைத் தரக்கூடியவர்கள். அப்படிப்பட்ட ஊழியர்கள் நீண்டகாலமாக வெள்ளையர்கள் ஆட்சிக்காலத்திலிருந்து பகுதி நேர ஊழியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாட்டுக்கு விடுதலை கிடைத்து இருக்கிறது. அவர்களுடைய பணிக்கு விடுதலை கிடைக்கவில்லை என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சாவு வந்தால் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. தற்கொலை என்றால் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மதுவிலக்கு கொள்கைக்குக்கூட இரவும் பகலும் காக்க வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் வெள்ளக் காலங்களில், மழைக் காலங்களில்.........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அமைச்சர் சொன்னதில் உங்களுக்கு ஏதாவது விளக்கம் வேண்டுமானால் நீங்கள் அனுமதி பெற்றுக் கேட்கலாம், இதை நான் ஸ்பெஷல் மென்ஷனாகத்தான் அனுமதித்து இருக்கிறேன்.

<u>திரு. வே. தம்புசாமி</u> : அப்படி பாதுகாக்கக்கூடிய ஊழியர்கள் அவர்கள். அதோடு மட்டுமல்லாமல் இந்தப் போராட்ட வேளையில் நான்கு பேர்கள் இறந்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர்களை அழைத்து மீண்டும் பசி அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டும். அவர்களுடைய பதவியை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இறந்தவர்களுக்கு விரைவாக நிதி வழங்க வேண்டும். கைது செய்யப்பட்டவர்களை எந்தவிதமான நிபந்தனையும் இன்றி விடுதலை செய்வதற்கு அரசு முன்னுக்கு வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போதும் காலம் தாழ்ந்து விடவில்லை. அவர்களோடு பேசுவதற்கு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும், நிர்வாகமும் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

முற்பகல் 11-25

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடே விடுதலை அடைந்து விட்டது. ஆனால் இவர்களுக்கு விடுதலை இல்லையே என்று

அவர்கள் சொன்னார்கள். நாடே விடுதலை அடைந்து பல ஆண்டுக்காலம் ஆகியும், புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலாவது விடுதலை அடைவார்களா என்ற கோரிக்கையை இப்போது வைத்திருக்கிறார்கள். அதற்காக மகிழ்ச்சி. நான் முன்பே சொன்னபடி, அவர்களோடு பேசுகின்றபோது, கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற முடியாமல் இருப்பதால் சில கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். நான் அதை இல்லை என்று சொல்லவில்லை. முதலமைச்சரிடத்திலே நேற்றுதான் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். நேற்று கொடுத்ததற்கு இன்றைக்கு அவர்களால் எப்படிச் செய்ய முடியும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு 31 ஆயிரம் பேர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு அரசினுடைய விதிப்படி, கடைசி வேலையிலே சேருகின்றவர்கள் எட்டாவது வகுப்பு பரிட்சையாவது எழுதியிருக்க வேண்டும் என்பதுதான். எட்டாவது வகுப்பு வரையில் படித்தாவது, பரிட்சையாவது எழுதியிருக்க வேண்டும் என்பதுதான். ஆனால், அவர்களிலே 20 அல்லது 10 சதவீதம் பேர்கள்தான் எட்டாவது வகுப்பிற்கு மேலே படித்திருக்கிறார்கள். உங்களுக்கு நான் ஒன்றைச் சொல்லக்கடமைப்பட்டுஇருக்கிறேன். கிராமஅதிகாரிகளைஎல்லாம நீக்க வேண்டும் என்று, உத்தரவு போடவேண்டும் என்று கொண்டு வருகிறபோது, அன்றைக்கு இருந்த அதிகாரிகள் பகுதி நேர கிராம மணியக்காரர்களையும், பகுதி நேர கிராம ஊழியர்களையும் நீக்க வேண்டும் என்று மொத்தமாகத்தான் கொண்டு வந்தார்கள். ஆனால் அன்றைக்கு இருந்த, முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள், இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, கிராம மணியக்காரர்கள் எல்லாம் ஓரளவிற்கு வசதி படைத்தவர்கள். அவர்களை நீக்கிவிட்டால், எப்படியாவது அவர்கள் வாழ்ந்து விடுவார்கள். ஆனால் கிராமத்தில் இருக்கிற கிராமப் பணியாளர்கள் சாதாரணமானவர்கள். சாதாரணமானவர்களை ஆண்டாண்டுக் காலமாக, வெட்டியான் தலையாரி என்றுதான் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசு வந்துதான், அவர்களை வெட்டியான் என்று சொல்லக் கூடாது, தலையாரி என்று சொல்லக்கூடாது, வெட்டியான் என்றால் அப்போதெல்லாம். சுடலையைக் காப்பவன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, அந்த சொற்றொடரை நாடகத்திலே கூட பயன்படுத்தக் கூடாது என்று அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. எனவே அது இங்கே இருப்பது நல்லதல்ல. அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1993 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : நாடகத்திலே பயன்படுத்தக்கூடாது என்று சொல்கிற நிலைமையை உருவாக்கியதே இந்த இயக்கம்தான் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படி உள்ள பெயரை முதலில் மாற்றியது புரட்சித் தலைவர் அவர்கள் தான். கிராமக் காவலர்கள், கிராமத்தினுடைய காவலர்கள் என்று மாற்றியது. அதைத் தொடர்ந்து அவர்களுக்கு எல்லாம் நன்மையை நாங்கள் செய்து கொண்டு வந்திருக்கிறோம். அப்படி அவ்வளவு பேர்களையும் நீக்க வேண்டும் என்று சொல்கிறபோது, புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், கிராமத்தில் உள்ள மணியக்காரர்களை எல்லாம் நீக்கிவிட்டால், அவர்கள் எப்படி யாவது பிழைத்துக் கொள்வார்கள், அவர்கள் வசதி படைத்தவர்கள், ஆனால் இவர்கள் ஒன்றும் இல்லாதவர்கள், இவர்களை நீக்கிவிட்டால், அதற்குப் பிறகு இவர்களுக்கு வாழ்வு இல்லை, ஆகவேதான் இங்கே இருக்கிற உள் விதியை நீக்கினார்கள். கிராமத்தில் தற்காலிகமாக இருக்கிற கிராம உதவியாளர்களை, அந்தக் கிராமக் காவலர்களாக இருந்தவர்களை, அதற்கு முன் வெட்டியான்களாக இருந்தவர்களை பதவியைவிட்டு நீக்கக்கூடாது என்றும் அவர்கள் தொடர்ந்து இருக்க வேண்டும் என்றும் உத்தரவை அவர்கள் போட்டார்கள். இன்றைக்கு அத்தனை பேர்களையும் நாம் பகுதி நேரத்திலிருந்து முழு நேரமாக ஆக்க வேண்டும் என்றால் இருப்பவர்களிலே 10 சதவீதத்தினரைத்தான் ஆக்க முடியும். இதையெல்லாம் அவர்களிடத்திலே நான் கூப்பிட்டுப் பேசினேன். அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள், விதிமுறைப்படி இப்படி இருக்கிறது என்று. அவர்களுக்கு இருக்கிற ஊதியம் போதும் என்று நான் சொல்லவில்லை. இதற்கு என்ன செய்ய வேண்டும் என்று இந்த அரசு ஆய்ந்து கொண்டு இருக்கிறது. அவர்களுக்கு இந்த அரசுதான் முதலில் செய்தது. புரட்சித் தலைவர் தான் முதலில் செய்தார்கள். இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள்தான், 60 ஆயிரம் ரூபாய் என்பதை அவர்களுக்கும் உண்டாக்கினார்கள். இப்படி வந்தவர்களுக்கு 100 ரூபாய் ஏற்றிக் கொடுத்திருக்கிறார்கள், அதுமட்டுமல்ல ஆண்டு தோறும், அவர்களுக்கு கிராக்கிப் படி கொடுக்க வேண்டுமென்று சொல்லி இந்த அரசுதான் செய்திருக்கிறது. அவர்கள் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கையைப் பற்றி நான் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே கலந்து ஆலோசித்து அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற உணர்வு இந்த அரசுக்கு இல்லை—அதிகாரிகளிடத்திலே ஆலோசனை செய்து இன்றோ அல்லது நாளையோ முடிவு எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.